முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 179/2021

தேதி : 14-08-2025

(வா.சா.1) – திரு.ராமுக்கண்ணு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எனக்கு கிரைய ஒப்பந்தம் போட்டு கொடுத்தார் , ஆனால் அதன்படி அவர் நடக்கவில்லை அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த சொத்து எங்குள்ளது என்றால் தட்டான்குளத்தில். அதன் சர்வே எண் என்ன என்றால் 33/1A1A1A. நான் ஒப்பந்தம் போட்டதாக சொல்லப்படும் சொத்து மனையிடம் என்றால் சரிதான். எத்தனை மனையிடத்திற்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் 1 மனையிடம், 8.5 செண்ட் விஸ்தீரணம். அந்த மனையிடம் உள்ள இடத்திற்கு பெயர் என்ன என்றால் பிருந்தாவனம் கார்டன். எந்த தேதியில் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் 03.11.2017. அப்போது எவ்வளவு தொகை செலுத்தினேன் என்றால் ரூ.5 லட்சம். எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் ரூ.10 லட்சம்.

2. வழக்கு சொத்தின் மூல ஆவணங்கள், பட்டாவை பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதி பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா இஸ்மாயில் ராவுத்தர் மனைவி பல்ஹிஸ் பெயரில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. எத்தனை ஆண்டு காலக்கெடு ஒப்பந்தத்தில் போடப்பட்டது என்றால் 3 ஆண்டுகள். காலக்கெடுவிற்கு என்ன காரணம் என்றால் அவர் பெயரில் பட்டா வாங்குவதற்காக கால அவகாசம் கேட்டார். தாவா சொத்தின் மூல ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. ரூ.5 லட்சம் தொகை எப்படி கிடைத்தது என்றால் விவசாயத்திலிருந்து கிடைத்தது. பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் என்

அண்ணன் தங்கராஜ் உழவர் சந்தையில் வேலை பார்த்தார், பிரதிவாதியின் கணவரும் அங்கு வேலை பார்த்தார் அந்தவகையில் தெரியும். மேற்படி தங்கராஜ்க்கும் பிரதிவாதியின் கணவருக்கும் சுமார் 15 ஆண்டுகள் பழக்கம் இருக்கும் என்றால் சரியல்ல, 5 ஆண்டுகள் இருக்கும்.

3. தங்கராஜ்க்கும் பிரதிவாதியின் கணவருக்கும் இருந்த வரவு செலவு பற்றி தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. தங்கராஜ்க்கும் பிரதிவாதியின் கணவருக்கும் இடையில் தான் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றும், தொகை அதிகமாக இருந்ததால் என்னுடைய பெயரில் பொறுப்பிற்காக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.